# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண். 12/2025

## அ.சா. 7(LW 9)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. வேல்முருகன்** | **தொழில்** | |
| த **பெயர்** | இருளப்பன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **11.03.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது மேட்டுப்பட்டியில் குடியிருந்து சென்ட்ரிங் வேலை செய்கிறேன்.

என்னிடம் காட்டப்படும் மகஜரிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.**5 ஆகும். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ. 6** ஆகும். வழக்கில் இறந்து போன ராசுவை தெரியும். அவர் எனது அம்மாவின் அண்ணன் ஆவார். அவர் கொத்தனார் வேலை பார்த்து வந்த விவரம் தெரியும். நான் காவல்நிலையத்தில் வைத்து மேற்படி கையெழுத்துக்களை போட்டேன் என்ன விவரம் என்று தெரியாது.

<u>**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநியம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

கடந்த 07.08.2023 அன்று ராசு இறந்த விவரம் பற்றி தெரிந்து கொள்வதற்காக சம்பவ இடம் சென்று பார்த்துக் கொண்டிருந்தபோது அப்போது திண்டுக்கல் தாலுகா காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மகஜர், வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் நானும் விஜயகுமாரும் கையொப்பம் போட்டோம் என்றால் சரிதான். அதன்பின் போலிசார் சம்பவ இடத்தில் இரத்தக்கரை பட்ட காரை சிறிதளவு, இரத்தக்கரை படாத காரை சிறிதளவு, தலையனை உறை ஆகியவற்றை போலிசார் சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றி தயார் அத்தாட்சியில் நானும் விஜயகுமாரும் கையொப்பம் போட்டோம் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.11 22:15:32 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.